அரசியலமைப்புச் சட்டத்தை மீறி அரசுக்குத் தொடர்பில்லாத நபர்களை அரசுக் கூட்டத்தில் அனுமதித்த

# முதலமைச்சர் விஜய் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## காவல்துறை தலைமை இயக்குநரிடம் – ஆர்.எஸ்.பாரதி புகார் மனு!

**சென்னை, ஜூலை 2– முதலமைச்சராக பதவி ஏற்கும் பொழுது அரசின் ரகசியங்களை காப்பேன் என உறுதிமொழி ஏற்ற முதலமைச்சர் விஜய் தற்போது தனியார் நபர்களை அரசு நிகழ்ச்சிகளில் அனுமதித்து அரசு ரகசியங்களை அவர்களிடம் தெரிவிப்பது ஏன் ? என, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கேள்வி எழுப்பியுள்ளார்.**



அதன் விவரம் வருமாறு:

மக்களிடையே போதுமான பெரும்பான்மையை பெறாமல் மைனாரிட்டியோடு அமைக்கப்பட்டுள்ள விஜய் ஆட்சி தொடர்ந்து பல்வேறு தவறுகளைச் செய்துகொண்டிருக்கிறது.

குதிரை பேரம் நடத்தி வருகிறது தவெக அரசு. ஒரு கட்சியின் சார்பில் வெற்றி பெற்றுவிட்டு பதவிக்காக ஆளுங்கட்சிக்கு போவது இதுவே முதல்முறை. குதிரை பேரத்தில் தொடங்கிய இந்த விஜய் ஆட்சி பல்வேறு தவறுகளை செய்துகொண்டிருக்கிறது. விஜய்க்கு ஆட்சி செய்ய தெரியவில்லை என்றால் யாரிடம் ஆவது டியூஷன் சென்று கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அதற்காக அரசுக்கு தொடர்பில்லாத ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகிய தனியாரிடம் அரசின் நடவடிக்கைகளை மேற்கொள்ள விட்டுவிடு வது ஏற்புடையதல்ல.

தமிழர்களே அல்லாத இவர்கள் எந்த முறையில் கூட்டத்தில் பங்கேற்கிறார்கள். ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகியோர் அமைச்சரவை கூட்டத்திற்கும் அரசு சார்பில் நடத்துகிற அனைத்து கூட்டத்திற்கும் எப்படி கலந்துகொண்டிருக்கிறார்கள். விஜய் முதலமைச்சராக பதவியேற்கும் பொழுது ரகசிய காப்புரிமை எடுத்துக் கொள்கிறார். ஆனால் அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் இவர்களுக்கு தெரியப்படுத்துகிறார். குறிப்பாக முதல்வரின் அறைக்கு அருகிலேயே இவர்களுக்கு அறை ஒதுக்கப்பட்டுள்ளது. முதல்வரின் அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் இவர்கள் கலந்து கொள்கின்றார்கள் . இவர்கள் அரசு கூட்டங்களில் பங்கேற்பது கண்டனத்திற்குரியது. அவர்கள் மீது மற்றும் அவர்களுக்கு அனுமதி அளித்த முதல்வர் மீதும் காவல்துறையானது நடவடிக்கை எடுக்க வேண்டி காவல்துறை தலைமை இயக்குனருக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். அவர் நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் நீதிமன்றத்தில் வாயிலாக இதற்கு சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொண்டு நீதியை பெறுவோம்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.

---

## உலகின் பெருங்காவியங்களை தமிழில் தந்தவர்!

# தமிழ் வாழ்வாக வாழ்ந்து மறைந்துள்ளார் கவிஞர் புவியரசு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 2 - கவிஞர் புவியரசு மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**வானம்பாடி கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களில் முக்கியமானவரும் முதுபெரும் கவிஞருமான திரு.புவியரசு அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.**

**தமிழ்மீது கொண்ட பற்றின் காரணமாக ஜெகநாதன் என்ற தம் இயற்பெயரைப் புவியரசு என்று மாற்றிக் கொண்டவர். ஷேக்ஸ்பியர், கலில் கிப்ரான், உமர் கய்யாம், ஓஷோ, பியோதர் தஸ்தயேவ்ஸ்கி, ரவீந்திரநாத் தாகூர், காசி நஸ்ருல் இஸ்லாம் என உலகின் பெரும் கவிகள், எழுத்தாளர்களின் இறவாக் காவியங்களைத் தமிழில் ஆக்கியளித்துப் பங்காற்றியவர்.**

**இருமுறை சாகித்திய அகாதெமியின் விருதினையும், 2008ஆம் ஆண்டுக்கான கலைஞர் பொற்கிழி விருதினையும் வென்றவர்.**

**தம் வாழ்வே தமிழ் வாழ்வாக வாழ்ந்து மறைந்துள்ளார் கவிஞர் புவியரசு அவர்கள். அன்னாரை இழந்து வாடும் தமிழ் கூறும் நல்லுலகத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## வழக்கை வலியுறுத்த விரும்பாததால்

# அண்ணாமலைக்கு எதிரான வழக்கு வாபஸ்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 2 - தி.மு.க. பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு அவர்கள் சென்னை 17-வது மெட்ரோபாலிடன் மேஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் பா.ஜ.க.வின் தமிழக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலைக்கு எதிராக தொடுத்திருந்த மானநஷ்ட வழக்கை நேற்று முன்தினம் (30.6.2026) திரும்பப் பெற்றுக் கொண்டார்.**

முன்னதாக அண்ணாமலையும் டி.ஆர்.பாலு அவர்கள் மீது இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த புகார் வழக்கை வலியுறுத்த விரும்பவில்லை என நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இருதரப்பு மனுக்களையும் ஏற்றுக் கொண்டு, இரண்டு வழக்குகளையும் வாபஸ் பெற்றுக் கொள்ள நீதியரசர் அனுமதி அளித்தார்.

இந்த தகவலை டி.ஆர்.பாலுவின் வழக்கறிஞர் பி.வில்சன் அசோஸியேட் நிறுவனம் தனது அறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ளது.

---

## தமிழ்நாடு அரசு

# கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை முறையை சீரமைக்க வேண்டும் !

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜூலை 2- மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தமிழகத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இந்த ஆண்டும் ஆயிரக்கணக்கான இடங்கள் காலியாக உள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் கவலை அளிக்கின்றன. ஒரே மாநிலத்தில் தனியார் கல்லூரிகள் மாணவர் சேர்க்கையை விரைவாக நிறைவு செய்து கொள்ளும் நிலையில், அரசு கல்லூரிகளில் மட்டும் பெருமளவில் இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது, தற்போதைய சேர்க்கை முறையில் உள்ள குறைகளை வெளிப்படுத்துகிறது.

தமிழகத்தில் 1,044 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ள நிலையில், அரசு கல்லூரிகளில் முதல் கட்ட கலந்தாய்வுக்குப் பிறகும் 43 சதவீத இடங்கள் காலியாக இருப்பதாக வெளியாகியுள்ள தகவல் மிகுந்த கவலையை ஏற்படுத்துகிறது. இது மாணவர்களின் ஆர்வக் குறைவு அல்ல; மாறாக, சேர்க்கை நடைமுறைகளில் உள்ள திட்டமிடல் குறைபாட்டின் வெளிப்பாடாகும்.

அரசு, உதவி பெறும் மற்றும் தனியார் கல்லூரிகளுக்கான சேர்க்கை நடைமுறைகள் ஒருங்கிணைக்கப்படாமல் இருப்பதால், மாணவர்களும் பெற்றோர்களும் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகின்றனர். குறிப்பாக கிராமப்புற மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்கள் இந்த நிலைமையால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அரசு கல்லூரிகளில் தரமான கல்வி குறைந்த கட்டணத்தில் கிடைக்கக்கூடிய சூழல் இருந்தும், நிர்வாக தாமதங்கள் மற்றும் ஒருங்கிணைப்பு இல்லாமை காரணமாக மாணவர்கள் தனியார் கல்லூரிகளுக்கு தள்ளப்படுகின்றனர்.

தனியார் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை பொது கலந்தாய்வு நடைபெற்று முடிந்த பிறகே நடைபெறுகின்றது. இதே நடைமுறை கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேர்க்கையிலும் பின்பற்றப்பட வேண்டும்.

எனவே, அனைத்து கல்லூரிகளுக்கும் ஒரே நேரத்தில் சேர்க்கை செயல்முறையை நடைமுறைப்படுத்தும் வகையில் மையப்படுத்தப்பட்ட ஆன்லைன் கலந்தாய்வு முறையை தமிழக அரசு உருவாக்க வேண்டும். மேலும், அரசு கல்லூரிகளின் சேர்க்கை அட்டவணை, காலியிட விவரங்கள் மற்றும் கலந்தாய்வு தகவல்கள் முழுமையாக வெளிப்படையாக வெளியிடப்பட வேண்டும்.

உயர்கல்வி என்பது சமூக நீதியின் அடித்தளம். அந்த வாய்ப்பை ஏழை மற்றும் நடுத்தர குடும்ப மாணவர்கள் இழக்காதவாறு, அரசு உடனடியாக செயல்திறன் மிக்க சேர்க்கை சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சி வலியுறுத்துகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## உலகத் தமிழ் அறக்கட்டளை சார்பில் – உலகத் தமிழ் சிந்தனைத் தொடர் –

# பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் மணிமண்டபம் திறப்பு விழா!

## வா.மு.சே.திருவள்ளுவர் – வா.மு.சே.தமிழ்மணிகண்டன் – தமிழறிஞர்கள் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 2- உலகத் தமிழ் அறக்கட்டளை மற்றும் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் உலகத் தமிழ்ப் பேரவை சார்பில் பத்து நாள் உலகத் தமிழ் சிந்தனைத் தொடர் - 2026 மற்றும் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் மணிமண்டபம் திறப்பு விழா மற்றும் பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றி வரும் 20 தமிழ் சேவையாளர்களுக்கு சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவிக்கும் பாராட்டு விழா 26.6.2026 தொடங்கி 5.7.2026 வரை ராமநாதபுரம் மாவட்டம், ஆண்ட நாயக்கபுரம், அபிராமம், கமுதிக்கு அருகில் நடைபெறுகிறது.



இவ்விழாவில் உலகத் தமிழ் அறக்கட்டளை நிறுவனர் - தலைவர் வா.மு. சே.தமிழ் மணிகண்டன் வரவேற்புரை ஆற்றினார்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற இயக்குனர் வா.மு.சே.திருவள்ளு வர் சிறப்புரையாற்றினார்.

தமிழாகவே வாழ்ந்த பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் 75 ஆண்டு கால தமிழ் இலக்கியம், இதழ், சமூகப் பணி ஆகிய துறைகளில் அரிய சேவை செய்தார். அவருக்கு மணிமண்டபம் கட்டப்பட்டு அவரின் முதல் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 26.6.2026 அன்று திறக்கப்பட்டது.

மேலும் பெருங்கவிக்கோ பாரம்பரியப் பயணம், பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தமிழ்ப் பணி தொடங்கிய இடங்கள், ஆரம்பகால சமூகச் சேவை நினைவிடங் கள், தமிழ்ப் பணி வளர்ச்சிப் பயணம், மக்கள் உடனான தொடர்புகள், வழிகாட்டி விளக்கத்து டன் சுற்றுப்பார்வை, நினைவுப் புகைப்படம் உள்ளிட்ட கருத்துரைகள் விளக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் முனைவர் கடலூர் மணிமாறன், பாவலர் பன்னீர்செல்வம் ராஜமாணிக்கம் அமெரிக்கா, புலவர் ம.தமிழாளன், பாலசுப்பிரமணியன் தமிழ் வேலு அமெரிக்கா, நேதாஜி வே.சுவாமிநாதன், கோவிந்தராஜன் ஜானகிராமன் அமெரிக்கா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## கருநாடக மாநில தொ.மு.ச. பேரவையில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா கூட்டம் !

பெங்களூரு, ஜூலை 2- கருநாடக மாநில தொ.மு.ச பேரவை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103வது ஆண்டு பிறந்தநாள் விழா பொதுத் தொழிலாளர்கள் விழிப்புணர்வு கூட்டம் 7.7.2026 தேதி செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு கருநாடக மாநிலம் தங்கவயல் இராபர்சன் பேட்டை கிங் ஜார்ஜ் ஹாலில் நடைபெறுகிறது. கூட்டத்தில் த. நாராயணமூர்த்தி தமிழ்த் தாய் வாழ்த்து பாடுகிறார் மாநில தொ.மு.ச பேரவை பொது செயலாளர் ந. இராமசாமி வரவேற்பையாற்ற மாநில தொ.மு.ச பேரவை தலைவர் வி.சிவா தலைமமையில் மு.நித்தியானந்தன் ஜி.இரவிந்திரன் இராஜெயசூரியன் பி.முருகன் நூர்துநாதன் தாமஸ் துரை முன்னிலையில் தொழிலாளர்களுக்கு நலவுதவிகள் வழங்கி தலைமை தொ.மு.ச. பேரவை தலைவர் கி. நடராசன் துணைத்தலைவர் பி.கிருஷ்ணன் பொருளாளர் கே.ஆர். வள்ளுவன் துணை பொது செயலாளர் ஜெ.விஜய குமார் மாநில தி.மு.க இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மு.இராஜசேகர் எம். முருகானந்தம் மாநில தொ.மு.ச பேரவை துணை பொது செயலாளர் சுரேஷ் செயலாளர் எஸ்.சிவசங்கரன் பொருளாளர் எம்.இராமன் கருநாடக மாநில தி.க.தலைவர் குணவேந்தன் கருநாடக தமிழ் பத்திரிகையாளர் சங்க தலைவர் முத்துமணி நன்னன் செயலாளர் ஏ.வி.மதியழகன் தங்கவயல் தி.மு.க முன்னோடிகள் அருணாசலம் வ.முனிரத்தினம் வழக்கறிஞர் ப. மணிவண்ணன் பொன் சாரங்கபாணி கு.அறிவழகன் பெருமாள் கார்திக் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள் மாநில தொ.மு.ச பேரவை செயலாளர் த.கண்ணையன் நன்றி கூறுகிறார்.



சைதை மேற்கு பகுதி – தி.மு.க. இளைஞர் அணி பகுதி அமைப்பாளர் ஜிம் க.பிரபு தந்தையார் வி.கண்ணன் நினைவையொட்டி அன்னாரின் திருவுருவப் படத்திற்கு சென்னை தெற்குமாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினார்கள். பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், களக்காடி எல்லப்பன், பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, ஆர்.ரமேஷ், வட்டகழக செயலாளர்கள் த.மோகன்குமார் எம்.சி., சை.மு.சேகர், எஸ்.பி.கோதண்டம், அட்கோகமலநாதன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

---

## விவசாயக் கடன் தள்ளுபடி விவகாரம்:

# த.வெ.க. அரசைக் கண்டித்து விவசாயிகள் உண்ணாவிரதம்!

## சென்னையில் திரண்டனர்!

சென்னை, ஜூலை 2 - விவசாயக் கடன் தள்ளுபடி விவகாரத்தில் மோசடி செய்த த.வெ.க. அரசைக் கண்டித்து சென்னையில் விவசாயிகள் திரண்டு வந்து உண்ணாவிரத போராட்டம் பாடை கட்டி, சடலமாக படுத்து, ஒப்பாரி வைத்து நூதன போராட்டம் நடத்தி மோசடி செய்த த.வெ.க. அரசை கண்டித்து விவசாயிகள் கண்டன முழக்கமிட்டனர்.

த.வெ.க. தேர்தல் அறிக்கையில் கூறியபடி சிறு, குறு விவசாயி களுக்கு 100 சதவிகிதமும், பெரு விவசாயிகளுக்கு 50 சதவிகிதமும் நிலத்தின் அடிப்படையில் வேளாண் கடனை தள்ளுபடி செய்திட வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், விவசாய கடன் தள்ளுபடி விவகாரத்தில் த.வெ.க. அரசு மோசடி செய்துள்ளதாகவிவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதனை கண்டித்தும், நெல் குவிண்டால் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாய் விலை நிர்ணயம் செய்து, செப்டம்பர் 1 முதல் கொள்முதல் செய்ய வலியுறுத்தியும், சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே விவசாயிகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பி.ஆர். பாண்டியன் தலைமையில் நடைபெற்று வரும் இந்த போராட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டுள்ளனர். பாடை கட்டி, அதில் சடலம் போல் படுத்து, ஒப்பாரி வைத்து த.வெ.க. அரசுக்கு எதிராக நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

---

# காங்கிரஸ்....!

மாணிக் தாகூர் என்ன
ரவீந்திரநாத் தாகூரே
வந்தாலும் சரி

இன்னும் மிச்சமுள்ள ஆட்கள்
மொத்தப்பேரும் தமிழ்நாடு
காங்கிரஸுக்கு தலைவர்கள்
ஆனாலும் சரி

தமிழ்நாட்டில் காங்கிரஸ்
துளிர்க்காது.

அந்த மனச்சாட்சியற்ற
மரக்கட்டையின்
வேர் பட்டுப் போய்
வெகுகாலமாகிவிட்டது.

**என்னநாஞ்**
**சொல்றது...**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்